முருகப்பெருமான் துணை

**மகான் விறல்மிண்ட நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.11.2023**, சனிக்கிழமை

1. வரம்பல தந்து உலகினில்
வரும் மக்களை தன் வழி
அறம் கூட்டி ஞானியாக்கிட
அற்புதம் நிகழ்த்தும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அருளுவேன் அறிவுரை ஆசி
வரங்களென சோபகிருது தேள்திங்கள்
வல்லமைபட உபயதிகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 02 ம் நாள், 18.11.2023, சனிக்கிழமை)
3. வாரமதில் விறல்மிண்ட நாயனாரும்
வழங்குவேன் உலகநலம் பெற
ஆரவாரம் ஏதுமின்றி உலகினில்
அமைதிபட அன்னதான சேவை வழி
4. சேவை வழி அற்புதம்பல நடத்திட
சேவகர்களாக உலக மக்கள்
அவதார ஞானி அரங்கனோடு
அறிவிப்பேன் இணைந்தால் போதும்
5. போதுமப்பா தன் கரங்கள்பட
புதுமை காண அரங்கன் தரும்
மேதகு தீட்சைகள் எல்லாம்
மேலான சக்திகளாக மாறி
6. மாறியே கருமவினை போக்கும்
மரணபயம் அண்டா மீட்கும்
அறிவுத் தெளிவு திடம் கூட்டி
ஆணவ மலம் தனை அகற்றி

7. அகற்றி அமைதிபட பாதுகாப்புற
அரங்கன் வழி உயர்வழியென
அகலா கடைப்பிடித்திடுகின்ற
ஆற்றலும் சரணாகதியும் கூடும்
8. கூடாத மாயை சிக்கல்கள்
குடிவெறி பணவெறி அபகரிப்பு
கூடாத குணக் கேடுகளெல்லாம்
குருவருளால் அனுகாத வண்ணம்
9. வண்ணமுடன் பாதுகாப்புத் தேறி
வருங்காலம் தனை நேர்த்தியாக
எண்ணம் தூய்மைபட கணித்து
எளிமைபட தயவுபட வாழும் பக்குவம்
10. பக்குவமோடு ஞானவழி ஈடுபாடும்
பரிபக்குவம் தரும் ஞானிகள் பூசையும்
தேக்கமற ஆன்மாவை தேற்றும்
தேசிகனாரின் அன்னதான சேவையும்
11. சேவையும் வளர்த்து சிறந்து
சேவகர்களாக சேர்ந்தவரெல்லாம்
அவனியில் ஞானிகளாகத் தேறி
அகிலத்தில் நல்லாட்சித் தருவர்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–